


கழக அயலக அணியின் மாநில, மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கலந்தாய்வுக் கூட்டம், சேலம் போஸ் மைதானத்தில் 08.07.2025 அன்று மிகுந்த எழுச்சியுடன் நடைபெற்றது. கழக அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா எம்.பி. தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு, கழக அயலக அணித் தலைவர் கலாநிதி வீராசாமி எம்.பி. முன்னிலை வகித்தார். தமிழ்நாடு முழுவதிலு மிருந்து திரண்டு வந்திருந்த அயலக அணி நிர்வாகிகளிடையே, கழகத் துணைப் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திருச்சி சிவா ஆலோசனைகள் வழங்கி எழுச்சியுரையாற்றினார். நிகழ்ச்சியில் கழக அணியின் இணை துணைச் செயலாளர்கள் டாக்டர்.செந்தில்குமார், வழக்கறிஞர் மனுராஜ் சண்முகசுந்தரம், வழக்கறிஞர் பி.புகழ்காந்தி, திருமதி.எஸ்.உமாராணி எம்.சி., விஜயன் ராம கிருஷ்ணன் எம்.சி., வழக்கறிஞர் கன்னிகை ஜி.ஸ்டாலின், வழக்கறிஞர் பரிதிஇளம்சுருதி எம்.சி., முத்துவேல் ராமசாமி, சேகர் ஜே.மனோகரன், குமரி ஏ.பாபு வினிபிரட் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## கரூரில் – முதல் வாக்குச் சாவடி நிர்வாகிகள் கூட்டம்!

# கலைஞர் முதலில் வென்ற குளித்தலை தொகுதியில் இருந்து நமது வெற்றிப் பயணத்தை தொடங்குவோம்!

### வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. பேச்சு!



கரூர்.ஜூலை.12–

50 விழுக்காடு புதிய உறுப்பினர்களை கழகத்தில் இணைத்து, பட்டியலை ஒப்படைப்போம் என துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கரூரில் நடைபெற்ற முதல் வாக்குச்சாவடி நிர்வாகிகள் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. பேசினார்.

கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணிச் செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர், உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில், கரூர் மாவட்ட வாக்குச்சாவடி நிர்வாகிகள் கூட்டம் கரூர் ராயனூர் தளபதி திடலில் நடைபெற்றது. கரூர் மாவட்ட கழக வாக்குச்சாவடி முகவர்கள் (பிஎல்ஏ.2), வாக்குச்சாவடி டிஜிட்டல் முகவர்கள் (பி.டி.ஏ), பூத் இளைஞர் அணியினர், பூத் மகளிர் அணி, பூத் கமிட்டி நிர்வாகிகள் (பி.எல்.சி) என 16000 பூத் கமிட்டி நிர்வாகிகள் பங்குபெற்ற மாபெரும் வாக்குச்சாவடி நிர்வாகிகள் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் கரூர் மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. பேசியதாவது

மூன்று தினங்களுக்கு முன்னர் துணை முதலமைச்சர் அவர்களிடம் அனுமதி கேட்டு கரூர் மாவட்டத்திலுள்ள 1055 வாக்குச்சாவடிகளிலும் பூத் நிர்வாகிகள் சுமார் 16,000 பேர் பங்கேற்கின்ற கூட்டத்தில் உரையாற்ற வேண்டும் என கேட்டுக்கொண்டதன் பேரில் வருகை தந்த துணை முதலமைச்சர் அவர்களுக்கு வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம். நின்ற தேர்தல்களில் எல்லாம் வென்ற முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் முதன்முதலாக நின்று வென்ற தொகுதி குளித்தலை. அந்த தொகுதி இடம் பெற்ற கரூர் மாவட்டத்தில் இருந்து பூத் கமிட்டி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் தொடங்கப்பட்டு இருக்கின்றது. இதனை வெற்றிப்பயணமாக மாற்றிட கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின், வழியில் இளைஞர்களின் நம்பிக்கை நட்சத்திரம், துணை முதலமைச்சர் அவர்களுடைய கரங்களில், மேற்கு மண்டலத்தில் உள்ள அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் மகத்தான வெற்றி பெற்று வெற்றிக்கனியை சமர்ப்பிப்போம்.

1ஆம் தேதி தலைவர் அவர்கள், ஓரணியில் தமிழ்நாடு என்கிற மாபெரும் முன்னெடுப்பினை தொடங்கி வைக்க, 3ம் தேதி புதிய உறுப்பினர் சேர்ப்பு பணிகளை தொடங்கினோம். ஏறத்தாழ ஆறு நாட்களில் கரூர் மாவட்டத்தில் இடம்பெற்றிருக்கக்கூடிய, நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும், முதல் இடத்தை பெறக்கூடிய அளவிற்கு அதிகமான உறுப்பினர்களை சேர்த்து கொடுத்த அனைத்து பூத் கமிட்டி நிர்வாகிகளுக்கும், செயலாளர்கள் அனைவருக்கும், மாவட்ட கழகத்தின் சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். மேதிநகர் பகுதியில்

650 வாக்காளர்களில் 550பேரை கழக உறுப்பினர்களாக சேர்த்து சிறப்பான பணியினை நமது நிர்வாகிகள் மேற்கொண்டுள்ளனர்.

ஏற்கனவே நமது தலைவர் அவர்கள் 30 விழுக்காடு என இலக்கு நிர்ணயித்தபோது, நிர்வாகிகளுடன் கலந்து பேசி மேற்கு மாவட்டங்களில் 40 விழுக்காடு என்கின்ற அளவிற்கு, புதிய உறுப்பினர்களை சேர்க்க முயற்சி செய்வோம் என்கிற பணியில் ஈடுபட்டிருக்கின்றோம். நிச்சயம் நாம் அனைவரும் முயற்சி செய்தால் 50 விழுக்காடு களுக்கு மேல் புதிய உறுப்பினர்களை சேர்க்க முடியும். இப்பணிகளை சிறப்பாக மேற்கொண்டு அதனை நம்முடைய துணை முதலமைச்சர் அவர்களது கரங்களில் ஒப்படைப்போம் என்ற உறுதியை தெரிவித்துக் கொள்கிறேன்.

234 தொகுதிகளிலும் முதல் 10 இடங்கள் பட்டியலில் கரூர் மாவட்டத்தில் உள்ள நான்கு தொகுதிகளும் இடம்பெற்றது என்கிற நிலையை, அனைவரையும் ஒருங்கிணைத்து செயலாற்றி உருவாக்க வேண்டும். 2021 சட்டமன்ற தேர்தலின் போது நமது கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்த நான்கு வேட்பாளர்களும் உதயசூரியன் சின்னத்தில் வெற்றி பெற கரூர் மாவட்ட மக்கள் மகத்தான ஆதரவினை அளித்தனர். அதேபோல் 2026 சட்டமன்ற தேர்தலிலும், நான்கு தொகுதிகளிலும் உதயசூரியனை வெற்றி பெறச்செய்து உங்களது கரங்களில் ஒப்படைப்போம் என்கிற உறுதியை தெரிவித்துக் கொள்கின்றோம். கரூர் மாவட்ட மக்களுக்கு பல்வேறு அரசு நலத் திட்டங்களை ரூ. 3 ஆயிரம் கோடி மதிப்பீட்டில் முதலமைச்சர் அவர்களும், துணை முதலமைச்சர் அவர்களும், அளித்துள்ளார்கள். இதற்காக முதலமைச்சர் அவர்கள், துணை முதலமைச்சர் அவர்களுக்கு, நாம் செலுத்துகின்ற நன்றிக்கடனாக நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும் அதிகமான வாக்கு வித்தியாசத்தில் உதயசூரியன் வென்றது என்கிற வரலாற்றுச் சாதனையை உருவாக்கிட வேண்டும்.

மேற்கு மாவட்டத்தின் வெற்றிப் பயணம் என்பது குளித்தலையில் இருந்து தொடங்கியது, நாம் முழுமையாக வெற்றி பெற்றோம் என்கின்ற நிலை அமைந்திட வேண்டும். எனவே அனைவருக்கும் அன்பான வேண்டுகோளாக வைக்கிறேன். தலைவர் அவர்கள் 40 நாட்கள் என அவகாசம் வழங்கியுள்ளார்கள். 20 நாட்களில் முடிக்க வேண்டும் என பயணத்தை தொடங்கி இருக்கிறோம். அதற்கும் முன்னதாகவே பணிகளை முடித்திட சிறப்பு கவனம் செலுத்திட வேண்டும் என அனைவரையும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இயக்கத்தின் ஆணிவேராக, எந்த தேர்தல் களம் வந்தாலும் வாக்காளர்களை சந்தித்து வாக்கு சாவடிக்கு அழைத்துச் சென்று உதயசூரியனுக்கு வாக்குகளாக மாற்றி வெற்றி வாகை சூடுவதற்கு அடித்தளமிடுகின்ற வாக்குச்சாவடி நிர்வாகிகளுக்கு நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு செந்தில் பாலாஜி பேசினார்

## திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி, கந்திலி ஒன்றியத்தில்

# மகளிர் பேருந்து துவக்கம், ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டிடம்!

### அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

திருப்பத்தூர், ஜூலை 12-

முதலமைச்சர் அவர்களின் மக்கள் நலத்திட்டத்தில் பல்வேறு துறைகளின் வாயிலாக மக்களுக்கு நலத்திட்ட பயன்கள் சென்றடைகின்றது.

திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் நல்லதம்பி தொடர்ந்து மக்களை சந்தித்து குறைகள் கேட்டறிந்து நிகழ்ச்சிகளில் கலந்து வருகின்றார். அதன் தொடர்ச்சியாக கொண்டு கந்திலி ஒன்றியம், சுந்தரம்பள்ளி ஊராட்சி மன்ற அலுவலகத்திற்காக திட்டத் தின் கீழ் 30 லட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டிடம் கட்டப்பட்டது. இந்த கட்டிடத்தை சட்டமன்ற உறுப்பினர் அ.நல்ல தம்பி திறந்து வைத்தார்.

ஏற்கனவே இருந்த கட்டிடம் பழுதடைந்து பயன்படாத நிலையில் புதிய கட்டிடம் கட்ட வேண்டுமென ஊராட்சிமன்ற நிர்வாகக் கோரிக்கை வைத்து அதற்காக அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று கட்டிடம் கட்ட சட்டமன்ற உறுப்பினர் அனுமதி பெற்று தந்து கட்டிடம் கட்டப்பட்டது. அதன் திறப்பு விழா ஊராட்சி மன்ற தலைவர் விஜயலட்சுமி கருணாநிதி தலைமையில் நடைபெற்றது.

மேலும், நத்தம் ஊராட்சி மன்ற தலைவர் ர.குமார் தலைமையில் நத்தம் ஊராட்சியில் சுந்தரம் பள்ளி முதல் நத்தம் வரை அரசு பேருந்து வழித்தடம் நீட்டிக்கப்பட்டது உடன் ஒன்றிய பொது நிதியிலிருந்து 3.5இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக அமைக்கப்பட்ட 30 மின்விளக்கு களை எம்.எல்.ஏ. நல்லதம்பி துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், வட்டார வளர்ச்சி உ.பாலமுருகன், வி.சதானந்தம், ஒன்றிய செயலாளர்கள். கே.ஏ.குணசேகரன், அலுவலர்கள். கே.முருகேசன், கந்திலி ஒன்றிய சேர்மன் திருமதி திருமுருகன், துணை சேர்மன்.மோகன் குமார், ஊராட்சி மன்றதலைவர். விஜய லட்சுமி கருணாநிதி, ஒன்றிய கவுன்சிலர். சாந்தாசண்முகம், சு.அரசு, ஒ. அவைத்தலைவர், ஆனந்தன், கிளை செயலாளர்கள் மற்றும் கழகதோழர்கள், வார்டு உறுப்பினர்கள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியின் இறுதியில் நீண்டநாள் கோரிக்கையினை நிறை வேற்றித் தந்த திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினருக்கு பொதுமக்கள் நன்றி தெரிவித்தனர்.

## தி.மு.க. அயலக அணி

### காஞ்சிபுரம் மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

**தி.மு.க. அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா, எம்.பி., அறிவிப்பு**

**கழகத்தலைவர்** அவர்களின்ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு **காஞ்சிபுரம்** மாநகர தி.மு.க. அயலக அணியின் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**காஞ்சிபுரம் மாநகரம்**

அமைப்பாளர் - ஜி. தனசேகரன் 25, பாலசுந்தரம் தெரு, வேளிங்கபட்டறை, காஞ்சிபுரம்.

துணை அமைப்பாளர்கள் - 1) வி. டில்லிபாபு 942எ, ஏ.கே.டி.எஸ். மணி தெரு, காஞ்சிபுரம். 2) கே. ரசூல் 15எ/12, பெருமாள் தெரு, காஞ்சிபுரம். 3) சி. சுரேஷ் 201, அன்னை சத்யா நகர், காஞ்சிபுரம். 4) பி. சுரேஷ்குமார் 9, விளக்கடி கோயில் தோப்பு தெரு, காஞ்சிபுரம்.

**"அண்ணாஅறிவாலயம்"**
சென்னை - 18.
நாள் : 11-07-2025

**எம்.எம்.அப்துல்லா, எம்.பி.,**
செயலாளர்,
தி.மு.க.அயலகஅணி.

## தி.மு.க. விவசாய அணி

### தஞ்சை மாநகர அமைப்பாளர்- துணை அமைப்பாளர்கள் நியமனம்

**விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன் அறிவிப்பு**

**கழகத்தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. விவசாய அணியின் தஞ்சை மத்திய மாவட்டம் -தஞ்சை மாநகரஅமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**தஞ்சை மத்திய மாவட்டம்**

**தஞ்சை மாநகரம்**

அமைப்பாளர் - க. வினோத் மேலராஜவீதி, தஞ்சாவூர்.

துணை அமைப்பாளர்கள் - 1) நா. அமிர்தராஜ் சுபேதார் தெரு, எம். சாவடி, தஞ்சாவூர். 2) ரா. வசந்த் வெட்டுக்காரத் தெரு, தஞ்சாவூர். 3) மு. கதிரேசன் கவர்காரத் தெரு, கீழவாசல், தஞ்சாவூர். 4) பா. சுந்தர் முல்லை நகர், மானோஜிப்பட்டி சாலை, தஞ்சாவூர். 5) பி. ஜெயபிரகாஷ் பெரிய தெரு, சுங்காந்திடல், கரந்தை, தஞ்சாவூர்.

**"அண்ணாஅறிவாலயம்"**
சென்னை - 18.
நாள் : 11-07-2025

**ஏ.கே.எஸ்.விஜயன்**
செயலாளர்,
தி.மு.க. விவசாய அணி



விழுப்புரம் தெற்கு மாவட்டம், திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி, திருக்கோவிலூர் கிழக்கு ஒன்றியம், விளந்தை ஊராட்சியில் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி மண், மொழி, மானம் காக்க இணைவோம் "ஓரணியில் தமிழ்நாடு" புதிய உறுப்பினர் சேர்க்கையை வீடு, வீடாகச் சென்று துவக்கி வைத்தார். உடன் மாவட்ட துணைச் செயலாளர் டி.என்.முருகன், மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர், ஒன்றிய செயலாளர் மு.தங்கம், ஒன்றிய செயலாளர்கள் ஜி.ரவிச்சந்திரன், எஸ்.லூயிஸ், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் எஸ்.அன்பு, மாவட்ட கவுன்சிலர் ராஜீவ்காந்தி, ஒன்றிய நிர்வாகிகள் தீனதயாளன், தண்டபாணி, ஜெயப்பிரகலநாதன், ஆனந்தன் , சுகவனராஜன், முருகன், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் பாலகிருஷ்ணன் , மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் அருண், ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் விஜயரங்கன், உள்ளாட்சி பிரதிநிதிகள், BLA 2, BDA, கிளைச் செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## தாம்பரம் மாநகரம் முழுவதும் இளைஞர் அணியின் சார்பில்,

# தெருமுனைக் கூட்டங்களை எழுச்சியோடு ஏற்பாடு செய்திடுவீர்!

### மாநகரகழகச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜாஎம்.எல்.ஏ.,அறிவிப்பு



கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழியில், சீரிபாயும் சிப்பாய்களாக, கழக இளைஞர் அணியினரைவழி நடத்தும், கழகஇளைஞர் அணிச் செயலாளர்தமிழ்நாடு துணைமுதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள்விழா - நாடுபோற்றும் 4 ஆண்டு காலசாதனைகளைவிளக்கி தெருமுனைகூட்டம். பகுதிஇளைஞர் அணிஅமைப்பாளர்கள், தாம்பரம் மாநகரத்திற்குட்பட்ட, 10 பகுதிகளிலும்கீழ்காணும் அட்டவணையில் அறிவிக்கப்படும்

| வ. எண் | தேதி | பகுதி | இடம் | பேச்சாளர் |
|---|---|---|---|---|
| 1. | 12.07.2025 | பம்மல் வடக்கு | குளக்கரைதெரு, அனகாபுத்தூர் | முகலிவாக்கம்தங்கம் இளம் பேச்சாளர் மா.பூபதி |
| 2. | 12.07.2025 | பம்மல் தெற்கு | பம்மல்நல்லத்தம்பிரோடு | முகலிவாக்கம்தங்கம் இளம் பேச்சாளர் மா.பூபதி |
| 3. | 13.07.2025 | பல்லாவரம் வடக்கு | கோவளம் தெரு, பழையபல்லாவரம் | நாத்திகம் நாகராஜன் இளம் பேச்சாளர் தே.சிலம்பரசன் |
| 4. | 13.07.2025 | பல்லாவரம் தெற்கு | அனுமார் கோவில்தெரு, ராதாநகர் | நாத்திகம் நாகராஜன் இளம் பேச்சாளர் தே.சிலம்பரசன் |
| 5. | 14.07.2025 | செம்பாக்கம் வடக்கு | சிதம்பரம் தெரு, பாரதிபுரம் | ஆலந்தூர்மலர் மன்னன் தாம்பரம்ஏகாம்பரம் |
| 6. | 14.07.2025 | செம்பாக்கம் தெற்கு | காமராஜபுரம் மெயின் ரோடு | ஆலந்தூர்மலர் மன்னன் தாம்பரம்ஏகாம்பரம் |
| 7. | 15.07.2025 | தாம்பரம் கிழக்கு | அம்பேத்கர் நகர் சந்திப்புஅகரம் மெயின் ரோடு | ஒப்பிலாமணி இளம் பேச்சாளர் பம்மல்தினேஷ் |
| 8. | 15.07.2025 | தாம்பரம் மேற்கு | திருவள்ளுவர் தெரு, கிழக்கு தாம்பரம் | ஒப்பிலாமணி இளம் பேச்சாளர் பம்மல்தினேஷ் |
| 9. | 16.07.2025 | பெருங்களத்தூர் வடக்கு | காந்திசாலை, மேற்குதாம்பரம் | செங்கைதாமஸ் இளம் பேச்சாளர் ரிஷிசந்தோஷ் |
| 10. | 16.07.2025 | பெருங்களத்தூர் தெற்கு | வார்டு 59 காமராஜர் நகர் | செங்கைதாமஸ் இளம் பேச்சாளர் ரிஷிசந்தோஷ் |

தெரு முனை கூட்டங்களைசிறப்பாகஏற்பாடுசெய்துநாடாளுமன்ற / சட்டமன்றஉறுப்பினர்கள்மற்றும் மேயர்,துணைமேயர்,இளைஞர் அணிநிர்வாகிகளைஒருங்கிணைத்துஅந்தந்தபகுதிக்குட்பட்டசெயற்குழு / பொதுகுழுஉறுப்பினர்கள், பகுதிச் செயலாளர்கள் / நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள் / நிர்வாகிகள், உள்ளாட்சிமன்றபிரதிநிதிகள், பகுதிக்குட்பட்டமாவட்ட / மாநகர / பகுதியில்உள்ளஅனைத்துஅணிகளின் அமைப்பாளர்கள் / துணைஅமைப்பாளர்கள், கழகச் செயல்மறவர்கள், பொதுமக்கள்மற்றும் மாநகரகழகச் செயலாளர்ஆகியநானும்,எனஏராளமானோர் கலந்துக் கொள்ளசெய்துசிறப்பித்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ.,**
**தாம்பரம் மாநகர கழகச் செயலாளர்**